بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் நன்றாக கவனத்தில் கொள்ள வேண்டும். இறைவன் உங்களின் தொண்டுகளுக்கு தேவை உடையவன் அல்லன். உங்களின் உதவிகளுக்கும் தேவை உடையவன் அல்லன். அதே போன்று உங்களின் தியாகங்களுக்கும் அவன் தேவை உடையவன் அல்லன். அவன் இந்த அமைப்பை உருவாக்கி இருக்கும் போது அவனே இதனை நடத்துவதற்கும் ஏற்பாட்டை செய்து விடுவான். உங்களுக்கு கிடைக்கின்ற தொண்டிற்கான வாய்ப்பினை இறை அருளாக கருதுங்கள்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 08.01.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு லா இலாஹ இல்லா அனா ஃபத்தஹிஸ்னி வகீலா என்ற ஒரு இல்ஹாம் இறங்கியது. அதாவது என்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை. எனவே நீர் என்னையே உமது பாதுகாவளனாக ஆக்கிக் கொள்வீராக. உமக்கு வேறு எந்த பக்கமும் பார்க்க வேண்டிய அவசியமில்லை. உம்முடைய எல்லா பணிகளையும் சரி செய்யக்கூடியவன் மற்றும் உமது அனைத்து பணிகளையும் நடத்தக் கூடியவன் நானே ஆவேன் என்று அல்லாஹ் இந்த இல்ஹாமில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஆறுதல் அளித்துள்ளான். மேலும் நானே உமது அனைத்து பணிகளையும் கண்காணிப்பேன். மேலும் நானே அந்த பணிகளுக்கு தேவையான காரணிகளை ஆயத்தம் செய்து தருவேன். நீர் எம்மை உமது இறைவனாக ஆக்கிக் கொண்ட பிறகு மேலும் நான் உம்மை மார்க்கத்தை பரப்புவதற்காக அனுப்பி இருக்கும் போது பின்னர் எந்த வகையிலும் கவலை கொள்ள தேவையில்லை. நான் உமது அனைத்து பணிகளையும் முழுமை செய்வதற்கு ஆற்றல் படைத்துள்ளேன் என்று அல்லாஹ் இந்த இல்ஹாமில் ஆறுதல் அளித்துள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த இல்ஹாமிற்கு சுருக்கமாக விளக்கமளித்துள்ளார்கள். அதாவது நானே உமது அனைத்து பணிகளுக்கும் உதவியாளனாக இருக்கின்றேன். அல்லாஹ் கூறுகின்றான். எனவே நீர் எம்மை உமக்கு உதவி செய்பவனாக கருதிக் கொள்வீராக. உமது பணிகளில் வேறு எவருக்கும் பங்கு இருப்பதாக கருதாதீர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த இல்ஹாம் இறங்கிய பிறகு எனக்கு மிகவும் அச்சம் ஏற்பட்டது. எனது உள்ளம் அச்சத்தால் நடுங்கியது. அல்லாஹ்வின் பார்வையில் எனது ஜமாஅத் பெயர் கூறுவதற்கு கூட தகுதியற்றதாக இருக்கின்றதோ என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

அன்னார் தனது ஜமாஅத்திற்கு கவனமூட்டினார்கள். மேலும் கூறினார்கள். ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் நன்றாக கவனத்தில் கொள்ள வேண்டும். இறைவன் உங்களின் தொண்டுகளுக்கு தேவை உடையவன் அல்லன். உங்களின் உதவிகளுக்கும் தேவை உடையவன் அல்லன். அதே போன்று உங்களின் தியாகங்களுக்கும் அவன் தேவை உடையவன் அல்லன். அவன் இந்த அமைப்பை உருவாக்கி இருக்கும் போது அவனே இதனை நடத்துவதற்கும் ஏற்பாட்டை செய்து விடுவான்.

அன்னார் தனது ஜமாஅத் உறுப்பினர்களை நோக்கி கூறினார்கள்: உங்களுக்கு கிடைக்கின்ற தொண்டிற்கான வாய்ப்பினை இறை அருளாக கருதுங்கள்.

ஆக, அன்னாரின் இந்த கூற்றை ஜமாஅத் உறுப்பினர்கள் புரிந்து கொண்டார்கள். அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக எல்லா விதமான தியாகங்களுக்கும் ஆயத்தமாகினர். அல்லாஹ்வின் உதவியின் காட்சிகளை இன்று வரை நாம் பார்த்து வருகின்றோம். இறைவன் அஹ்மதிகளின் உள்ளங்களில் தியாகங்களின் முக்கியத்துவத்திற்கான உணர்வுகளை ஏற்படுத்துகின்றான். மேலும் அஹ்மதிகள் அசாதாரண முன்னுதாரனங்களை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். ஜமாஅத்தில் வஸிய்யத் என்ற ஓர் அமைப்பு உள்ளது. சந்தா ஆம் என்ற அமைப்பும் உள்ளது. இதைத் தவிர்த்து பல்வேறு திட்டங்கள் உள்ளன. ஜமாஅத் சகோதரர்கள் இவற்றில் அசாதாரண முன்னுதாரனங்களை நிலை நாட்டுகின்றனர். இரண்டு திட்டங்கள் நிரந்தரமான திட்டங்களாகும். அதாவது தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீது ஆகும். ஜமாஅத் சகோதரர்கள் அறிந்தது போன்று பாகிஸ்தானில் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது கிராமப்புற மற்றும் தொலைதூர ஜமாஅத்துகளின் தர்பிய்யத் மற்றும் தப்லீக் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்பதற்காக இந்த வக்ஃபே ஜதீது திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இந்த திட்டம் முழு உலகத்திற்கும் பொதுவானதாக ஆக்கப்பட்ட போதும் இதற்கென்று சில குறிப்பான நோக்கங்கள் இருந்தன.

இந்த திட்டங்களின் நோக்கங்கள் என்ன ? என்ற கேள்வி அவர்களிடமும் எழலாம். எனவே இது தொடர்பாக நான் சுருக்கமாக தெளிவுபடுத்த விரும்புகின்றேன். நான் கூறியது போன்று வக்ஃபே ஜதீது திட்டம் சில குறிப்பிட்ட பகுதிகள் மற்றும் நாட்டிற்கான திட்டமாகும். அதாவது அந்த குறிப்பிட்ட நாடுகளின் செலவீனங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது. மேற்கத்திய நாடுகள் மற்றும் பணக்கார நாடுகளின் ஜமாஅத்துகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற வக்ஃபே ஜதீது சந்தா இந்தியா மற்றும் ஆஃப்ரிக்காவில் பொதுவாக கிராமப்புற பகுதிகளில் செலவிடப்படுகின்றன. இன்னும் கூறப்போனால் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இந்த திட்டத்தை பொதுவானதாக ஆக்கிய போது அதிலும் குறிப்பாக பணக்கார நாடுகளில்

இந்த திட்டத்தை செயல்படுத்தியதன் நோக்கம் இந்தியா மற்றும் காதியானின் செலவீனங்களை முழுமை செய்ய வேண்டும் என்பதாகும். ஆனால் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தின் கீழ் பெறப்படுகின்ற சந்தாக்கள் உலகத்தின் ஒவ்வொரு நாடுகளிலும் எங்கு மர்கஸின் உதவியின் தேவை இருக்கின்றதோ அங்கு செலவிடப்படும். ஏனென்றால் வசூலான தொகை மர்கஸிற்கே வருகின்றது.

எனவே, தேவையுடைய இடங்களில் அது செலவிடப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் வக்ஃபே ஜதீது மூலமாக ஏராளமான திட்டங்கள் ஏழை நாடுகளிலும் முன்னேற்றம் அடையாத நாடுகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஜனவரி மாதத்தின் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் புதிய வக்ஃபே ஜதீது ஆண்டிற்கான அறிவிப்பு செய்யப்படும். எனவே நான் இன்று வக்ஃபே ஜதீது தொடர்பாக எடுத்துரைப்பேன். மேலும் புதிய ஆண்டிற்கான அறிவிப்பையும் செய்வேன். மரபுகளுக்கேற்ப கடந்த ஆண்டின் அறிக்கையையும் எடுத்துரைப்பேன். அல்லாஹ்வின் அருளினால் வக்ஃபே ஜதீதின் 58 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி 2015 ஆண்டுடன் முடிவடைந்தது. இந்த ஆண்டில் அல்லாஹ்வின் அருளினால் ஜமாஅத் சகோதரர்களுக்கு 68 லட்சத்து 91 ஆயிரம் பவுண்ட் வக்ஃபே ஜதீது சந்தாவாக பொருள் தியாகம் செய்யும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. இந்த வசூல் கடந்த ஆண்டை விட 6 லட்சத்து 82 ஆயிரத்து 155 பவுண்ட் அதிகமாகும்.

இந்த ஒட்டுமொத்த வசூலில் மூன்றில் ஒரு பகுதி முன்னேற்றம் அடைந்த அல்லது வளர்ந்து வரும் நாடுகளில் இருந்து வசூல் செய்யப்படுகின்றது. எனவே ஒட்டுமொத்த வசூலில் மூன்றில் ஒரு பங்கு இந்த நாடுகளிலிருந்து வருகின்றது. மேலும் அந்த நாடுகளின் திட்டங்களுக்காக அது செலவிடப்படுகின்றது. மீதம் இரண்டு பங்கு இருக்கின்றது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இந்த திட்டத்தை காதியான் மற்றும் இந்தியா ஜமாஅத்துகளின் திட்டங்களுக்காக விரிவுபடுத்தினார்கள். எனவே மீதுமுள்ள இரண்டில் ஒரு பங்கு அங்கு செலவிடப்படுகின்றது. மீதமுள்ள பங்கு ஆஃப்ரிக்க மற்றும் ஏனைய நாடுகளில் செலவிடப்படுகின்றது. இந்தியாவில் இதுவரை இந்த வருடத்தில் 19 பள்ளிவாசல்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வருடம் 23 மிஷன் ஹவுஸ்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. நான்கு மிஷன் ஹவுஸ்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. இது தவிர காதியானில் மாநாட்டுத் திடல் மற்றும் ஏனைய பல திட்டங்களில் செலவிடப்பட்டுள்ளது. நேபாளம் இந்தியாவின் கண்காணிப்பில் தான் உள்ளது. இங்கிருந்து வக்காலத்தே தன்ஃபீஸ் கண்காணித்து வருகின்றது. பூடானும் அப்படித்தான். எவ்வாறிருப்பினும், நேபாளத்தில் இரண்டு முழுமையான பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. இரண்டு தற்காலிக ஷட்டுகளும் கட்டப்பட்டு இருக்கின்றன. பள்ளிவாசல்கள் மற்றும் மிஷன் ஹவுஸ்கள் கட்டுவதில் சிறப்பான கவனம் செலுத்தப்படுகின்றது.

இந்தியாவில் இந்த வருடம் தர்பிய்யத் வகுப்புகள் நடத்தப்பட்டது. Refresher course களும் பெரிய அளவில் நடத்தப்பட்டது. அதற்காகவும் செலவீனங்கள் ஏற்படுகின்றன. தற்போது இந்தியாவில் பணி செய்கின்ற முஅல்லிம்களின் எண்ணிக்கை 1127 ஆகும். அவர்களுக்கான Allowence கள், தங்குமிடத்திற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. பின்னர் அவர்களின் பயணங்களுக்கான செலவீனங்கள் இருக்கின்றன. இவ்வாறு பெரிய அளவில் செலவீனங்கள் உள்ளன. ஆஃப்ரிக்காவின் 26 நாடுகளில் தற்போது 1287 முஅல்லிம்கள் பணி செய்கின்றனர். கிராமப்புறங்களில் பள்ளிவாசல்கள் கட்டப்படுவதுடன் முஅல்லிம்கள் தங்குவதற்கான வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

எங்கு முஅல்லிம்கள் தங்குவதற்கான வீடு கட்ட முடியாதோ அங்கு வாடகைக்கு வீடு எடுக்கப்படுகின்றது. இப்போது உதாரணமாக ஆஃப்ரிக்காவில் 372 பகுதிகளில் முஅல்லிம்கள் தங்குவதற்கான சொந்தமான வீடு இல்லை. எனவே அங்கு வாடகைக்கு வீடு எடுக்கப்பட்டுள்ளது. அங்கு முஅல்லிம்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஆஃப்ரிக்காவில் 130 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளன. 47 பள்ளிவாசல்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 95 பள்ளிவாசல்கள் கட்டுவதற்கான திட்டங்களை அவர்கள் தீட்டியுள்ளனர். அடுத்து ஆஃப்ரிக்காவின் 18 நாடுகளில் 82 மிஷன் ஹவுஸ்களின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 13 நாடுகளில் 21 மிஷன் ஹவுஸ்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர்த்து ஏராளமான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆஃப்ரிக்காவில் புதிய அஹ்மதிகளின் தர்பிய்யத்திற்காக தர்பிய்யத் வகுப்புகள் மற்றும் Refresher course கள் நடத்தப்படுகின்றது. 1132 இமாம்கள் பயிற்சி பெற்றுள்ளனர். புதிய அஹ்மதிகளின் தர்பிய்யத் மற்றும் தஃலீம் வகைக்காக மற்றும் அவர்களை ஜமாஅத் அமைப்பின் சுறுசுறுப்பான அங்கத்தினர்களாக ஆக்குவதற்காக நான் கூறியது போன்று தர்பிய்யத் வகுப்புகள் மற்றும் Refresher course கள் நடத்தப்படுகின்றன.

ஏராளமான நல்லியல்பு கொண்ட பள்ளிவாசல்களின் இமாம்களும் பைஅத் செய்கின்றனர். ஜமாஅத்தில் இணைகின்றனர். அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து தர்பிய்யத் வழங்குவதற்கான அவசியம் உள்ளது. சரியான இஸ்லாம் பற்றிய விஷயங்களை கற்றுக் கொடுக்க வேண்டியதுள்ளது. அவர்களுக்காக புதிய வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

நான் தற்போது இந்த சந்தாக்களில் பங்கு பெறக்கூடிய சில புள்ளி விவரங்களை கூற விரும்புகின்றேன். 2010 ல் இந்த எண்ணிக்கை 6 லட்சமாக இருந்தது. இப்போது இந்த வருடம் அல்லாஹ்வின் அருளினால் இதில் பங்கு பெறக்கூடியவர்களின் எண்ணிக்கை 12 லட்சத்தை தாண்டி விட்டது. ஆனால் இன்னும் பெரிய அளவில் வெற்றிடம் உள்ளது. அடுத்து ஒரு சில சம்பவங்களையும் நான் உங்கள் முன்னிலையில் வைக்கின்றேன்.

தன்ஸானியாவைச் சார்ந்த நமது முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார். நமது ஒரு புதிய அஹ்மதி பெண்மணி ஒரு மாதத்திற்கு முன்பு பைஅத் செய்திருந்தார். ஒரு கிராமத்தை சார்ந்தவர் ஆவார். அவருக்கு வக்ஃபே ஜதீதின் பரக்கத்துகள் பற்றி கூறப்பட்ட போது கூறினார். என்னிடத்தில் சந்தா கொடுப்பதற்கு எந்த பணமும் இல்லை. ஆனால் சந்தாவிற்கான ஆண்டு முடிவடைகின்றது. எனவே நான் சந்தாவின் பரக்கத்திலிருந்து இழப்பிற்குரியவராக ஆவதற்கு விரும்பவில்லை. சற்று காத்திருங்கள் என்று கூறி தனது வீட்டிற்கு அந்த பெண்மணி சென்றார். வீட்டிலிருந்து முட்டைகளை எடுத்துக் கொண்டு கடை வீதிக்கு சென்று

முட்டைகளை விற்றார். அந்த விற்பனையில் கிடைத்த பணத்தை எடுத்துக் கொண்டு வந்து சந்தாவாக கொடுத்து விட்டார். அந்த பெண்மணி ஒரு மாதத்திற்கு முன்பே அஹ்மதியாகி இருந்தார். சந்தா கொடுப்பது அவசியம் என்ற உணர்வு அந்த பெண்மணிக்கு ஏற்பட்டிருந்தது.

அடுத்து கேம்பியாவிலிருந்து அமீர் சாஹிப் எழுதுகின்றார். ஒரு கிராமத்து நண்பர் ஒரு வருட காலமாக நோயாளியாக இருந்து வந்தார். அந்த நோய்வாய்ப்பட்ட போது எழுந்து நடக்க முடியாமல் இருந்தது. எந்தவொரு பணியையும் செய்ய முடியாமல் இருந்தது. அதன் காரணமாக பொருளாதார நிலையும் மிகவும் மோசமானதாக இருந்தது. எனவே கடந்த வருடம் வக்ஃபே ஜதீது சந்தா கொடுக்கும்படி அவருக்கு கூறப்பட்டது. அப்போது அவர் தனக்கு ஸதக்காவாக கொடுக்கப்பட்ட ஐந்து ஜல்ஸாஸிகளை வக்ஃபே ஜதீது சந்தாவாக கொடுத்து விட்டார். அவர் கூறுகின்றார். எந்த நபர் எழுந்து நடக்க இயலாமல் இருந்தாரோ அவரின் பணியில் அல்லாஹ் தஆலா பெரும் அருள் செய்து விட்டான். அவருக்கு கால்நடைகளின் ஒரு பெரும் பண்ணை அவருக்கு கிடைத்தது. அவர் விவசாயம் செய்கின்றார். அவர் கூறுகின்றார். இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருளாகும். எனது வயலில் விளைச்சலும் மிகுதியாக ஏற்பட்டது. எனக்கு கிடைத்திருக்கின்ற இந்த பண்ணை கூட சந்தா கொடுத்ததின் பரக்கத்துகள் ஆகும்.

பின்லாண்டிலிருந்து ஒரு நண்பர் எழுதுகின்றார். கடந்த வருடம் 510 ஈரோ எனது சந்தா வாக்குறுதியாக இருந்தது. இந்த வருடம் சூழ்நிலை சரியில்லை என்று எண்ணி 100 ஈரோவாக குறைத்து விட்டேன். அதிகமாக என்னால் கொடுக்க முடியாது. அவர் கூறுகின்றார். அல்லாஹ் என்னை இவ்வாறு பிடித்து விட்டான். ஒரு நாள் திடீரென்று சாலையில் எனது வாகனம் பழுதாகி விட்டது. அதை சரி செய்வதற்காக நான் Work Shop ற்கு சென்றேன். அங்கிருந்து வந்த பில் நான் முன்னர் வக்ஃபே ஜதீத் சந்தாவாக கொடுத்த 510 ஈரோவாக இருந்தது. வீட்டை அடைந்ததும் அந்த நபர் கூறினார். அல்லாஹ் எனக்கு பாடம் கற்பித்து விட்டான். அந்த அடிப்படையில் அவர் தனது வக்ஃபே ஜதீத் வாக்குறுதியை முழுமையாக செலுத்தி விட்டார்.

சிரோலியோனை சார்ந்த ஓர் அஹ்மதி பெண்மணி அவர் தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியை ஆவார். கூறுகின்றார். மிஷனரி சாஹிப் சந்தா பற்றி எடுத்துக் கூறினார். என்னிடத்தில் பணம் இல்லாமல் இருந்தது. எனக்கு ஒரு சகோதரர் இருந்தார். அவர் கிருத்தவர் ஆவார். நீண்ட காலமாக என்மீது கோபம் கொண்டிருந்தார். நானும் கிருத்தராக வேண்டும் என்று விரும்பி என்னை விட்டு விட்டு அமெரிக்கா சென்று விட்டார். அவர் கூறுகின்றார். நான் எப்படியோ கஷ்டப்பட்டு சந்தா கொடுத்து விட்டேன். அதன் பிறகு ஒரு நாள் எனக்கு எனது அந்த சகோதரனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் அவர் கூறினார். நீ சரியான பாதையில் தான் உள்ளாய். நீ அஹ்மதியாகவே இருந்து கொள். எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை. உனக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் எழுந்தது. எனவே நான் உனக்கு ஒரு தொகையை அனுப்புகின்றேன் என்று கூறினார். அந்த வகையில் அவர் பணத்தை அனுப்பினார். இவ்வாறு அந்த பெண்மணிக்கு அந்த சகோதரருடன் தொடர்பும் ஏற்பட்டது. மேலும் செல்வ செழிப்பும் உண்டானது.

இந்தியாவிலிருந்து முபல்லிக் எழுதுகின்றார். கோயம்பத்தூரிலிருந்து. ஒரு நண்பர் தனது மகளுக்காக நகை வாங்க கடை வீதிக்கு சென்றார். நகையை வாங்கிக் கொண்டிருக்கும் போது ஜுமுஆவிற்கான நேரம் ஆகி விட்டது. அந்த நபர் நாங்கள் தொழுது விட்டு வந்து இந்த நகையை வாங்கிக் கொள்கிறோம் என்று கடைக்காரரிடம் கூறி வந்து விட்டார். ஜுமுஆ குத்பாவில் எனது குத்பாவின் சுருக்கும் எடுத்துரைக்கப்பட்டது. அதில் தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பு இடம் பெற்றிருந்தது. சந்தாவை பற்றியும் கூறப்பட்டிருந்தது. அதில் ஒரு கண் பார்வையற்ற பெண்மணியின் சம்பவமும் எடுத்துரைக்கப்பட்டிருந்தது. அது அந்த நண்பரின் மீது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் மகளுக்கு நகை வாங்குவதற்காக வைத்திருந்த பணத்தை வக்ஃபே ஜதீது சந்தாவில் அவர் கொடுக்க வேண்டிய சந்தாவாக செலுத்தி விட்டார். பள்ளிவாசலை விட்டு வெளியே வந்து தனது மனைவியிடம் இது பற்றிய கூறிய போது அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மேலும் அந்த பெண்மணி கூறினார். குத்பாவின் போது நானும் இப்படித்தான் நினைத்தேன். நாம் முதலில் சந்தா கொடுத்து விடுவோம். அல்லாஹ் நமது மகளின் நகைக்கு வேறு ஏற்பாட்டைச் செய்து விடுவான்.

இந்தியாவின் சஹாரன்பூர் வக்ஃபே ஜதீது இன்ஸ்பெக்டர் எழுதுகின்றார். வக்ஃபே ஜதீது சந்தா வசூல் செய்வதற்காக U.P யிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு நண்பரிடம் சென்றோம். அந்த அஹ்மதி நண்பர் தனது மனைவியிடம் கூறினார். பெருநாள் வர இருக்கின்றது. என்னிடத்தில் வெறும் 200 ரூபாய் தான் உள்ளது. விரும்பினால் பெருநாள் ஆடையை வாங்கிக் கொள். அல்லது வக்ஃபே ஜதீது சந்தாவை கொடுத்து விடலாம் என்று கூறினார். அப்போது அந்த பெண்மணி கூறினார். முதலில் சந்தாவை கொடுத்து விடுங்கள். பெருநாள் ஆடையை பின்னால் பார்த்துக் கொள்ளலாம். சில மாதங்களை கழிந்திருந்தன. நாங்கள் மீண்டும் சந்தா வசூல் செய்வதற்கு அங்கு சென்றோம். அவர்களுடைய வீட்டை பார்த்து எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த நண்பர் கூறுகின்றார். நாங்கள் சந்தா கொடுக்க தொடங்கியதிலிருந்து எங்களுக்கு மிகவும் வேலை வாய்ப்பு வந்து விட்டது. நான் இதற்கு முன்னர் மற்றவரின் டிராக்டரை ஓட்டி வந்தேன். தற்போது நானே சொந்தமாக டிராக்டர் வாங்கி விட்டேன். எனது பணிகளில் எண்ணற்ற அபிவிருத்தி ஏற்பட்டு விட்டது.

இந்தியாவிலிருந்து மற்றொரு சம்பவம். ஒடிசாவிலுள்ள ஜகத்கரி என்ற ஊரை சார்ந்த ஒருவர் மிகவும் அதிகமாக கடன் வாங்கி இருந்தார். அதனால் மக்களிடமிருந்து ஒளிந்து மறைந்து வாழ்ந்து வந்தார். தனது ஊரை விட்டு விட்டு ஹைதராபாத் சென்று விட்டார். அவருடன் ஜமாஅத்தின் முபல்லிக் அல்லது இன்ஸ்பெக்டர் சாஹிப் தொடர்பு கொண்டார். அவருக்கு சந்தாவின் முக்கியத்துவம் பற்றி கூறப்பட்டது. எப்படியோ அவர் சந்தாவும் கொடுத்து விட்டார். ஜமாஅத்துடன் தொடர்பும் வைத்திருந்தார். அதன் பிறகு கூறுகின்றனர். அல்லாஹ் தஆலா எந்த அளவுக்கு அருள் செய்தான் என்றால் அவருக்கு நல்ல வருமானம் கிடைக்க ஆரம்பித்தது. மேலும் அல்லாஹ் தஆலா அவரது அனைத்து கடன் சுமையையும் அகற்றினான். கடனால் ஒளிந்து மறைந்து

வாழ்ந்தார். அந்த நிலை மாறியது மட்டுமல்லாமல் சொந்தமாக ஒரு வீடும் தனக்கென்று கட்டினார். தற்போது அவர் தனது வாக்குறுதியாக பல மடங்கு அதிகரித்து வழங்கியுள்ளார்.

பங்கால் மற்றும் சிக்கிமை சார்ந்த இன்ஸ்பெக்டர் சாஹிப் எழுதுகின்றார். டார்ஜலிங் ஜமாஅத்தை சார்ந்த ஒரு நண்பர் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஜமாஅத்தில் இணைந்திருந்தார். பொருள் தியாகத்தில் எப்போதும் முன்னிலையில் இருந்து வந்தார். இந்த வருடம் வக்ஃபே ஜதீத் சந்தா பட்ஜெட் தொடர்பாக சென்ற போது அவர் கூறினார், எனது தந்தைக்கு ஆபரேஷன் நடந்தது. எனவே அவரது சிகிச்சைக்காக ஒரு லட்சம் ரூபாய் செலவாகி விட்டது. எனவே நிலைமை மிகவும் கஷ்டமாக உள்ளது என்று கூறினார். அன்னாருடைய வாக்குறுதி பெரிய அளவில் இருந்தது. அதாவது 22 ஆயிரம் ரூபாயாக இருந்த தனது வாக்குறுதியை 17 ஆயிரம் ரூபாயாக குறைத்துக் கொண்டார். ஆனால் வசூல் செய்வதற்காக சென்ற போது அவர் 22 ஆயிரம் ரூபாயை கொடுத்து விட்டார். நான் ஒரு நன்மையை ஆரம்பம் செய்த பிறகு ஏன் அதனை நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது என்று அவர் கூறினார்.

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் ஆஃப்ரிக்கா, ஆஸ்திரேலியா, நார்வே, ஜெர்மனி, கனடா, தன்ஸானியா போன்ற நாடுகளிலுள்ள அஹ்மதிகளின் ஈமானுக்கு எழுச்சியூட்டக்கூடிய சம்பவங்களையும் வக்ஃபே ஜதீது சந்தாவினால் ஏற்பட்ட அருள்களையும் எடுத்துக் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். தூய வருமானத்தால் வழங்கப்பட்ட ஒரு பேரீச்சம் பழ கொட்டையை கூட அல்லாஹ் தஆலா மலையாக்கி விடுவான். ஒரு சிறிய கன்றுக்குட்டி ஒரு பெரிய விலங்காக மாறி விடும். அதே போன்று தூய வருமானத்திலிருந்து செய்யப்பட்ட தியாகத்தை அல்லாஹ் அதிகரிக்கின்றான். எனவே அல்லாஹ் இது போன்ற காட்சிகளை இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திலேயே காட்டுகின்றான்.

இப்போது நான் ஏற்கனவே கூறியது போன்று கடந்த ஆண்டின் அறிக்கையை எடுத்து வைக்கின்றேன். பாகிஸ்தானிற்கு பிறகு U.K முதல் இடம் வகிக்கின்றது. அமெரிக்கா இரண்டாவது இடத்திலும், ஜெர்மனி மூன்றாவது இடத்திலும், கனடா நான்காவது இடத்திலும், இந்தியா ஐந்தாவது இடத்திலும், ஆஸ்திரேலியா ஆறாவது இடத்திலும், இந்தோனேஷியா ஏழாது இடத்திலும், அதே போன்று மத்திய கிழக்கு நாட்டைச் சார்ந்த ஒரு நாடு எட்டாவது இடத்திலும், பெல்ஜியம் ஒன்பதாவது இடத்திலும் கானா பத்தாவது இடத்திலும் உள்ளது.

வசூலில் அதிக வசூல் அடிப்படையில் உள்ளூர் கரன்சியில் அதிக வசூல் அடிப்படையில் கானா முதல் இடத்தை பெற்றுள்ளது. அதன் பிறகு அமெரிக்காவும் பின்னர் U.K ம் இடம் பெற்றுள்ளது.

பெரிய ஜமாஅத்துகளில் தனி நபர் சந்தா அடிப்படையில் முதலிடத்தை மத்திய கிழக்கு நாட்டை சார்ந்த ஒரு நாடு பெற்றுள்ளது. இரண்டவாது இடத்தில் அமெரிக்காவும், மூன்றும் இடத்தில் மத்திய கிழக்கு பகுதியை சார்ந்த ஒரு நாடும் பெற்றுள்ளது. நான்காவது இடத்தில் சுவிட்சர்லாந்து, ஐந்தாவது இடத்தில் இங்கிலாந்தும் உள்ளது. ஆறாவது இடத்தில் ஆஸ்திரேலியாவும், 7 வது இடத்தில் பெல்ஜியமும், 8 வது இடத்தில் ஜெர்மனியும், கனடா 10 வது இடத்தை பெற்றுள்ளது.

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த ஆண்டு வக்ஃபே ஜதீதில் 12 லட்சத்தை விட அதிகமான மக்கள் கலந்து கொண்டுள்ளனர். இது கடந்த ஆண்டை விட ஒரு இலட்சத்து ஆறு ஆயிரம் அதிகமாகும். இதில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை ஆஃப்ரிக்காவில் அதிகரித்துள்ளது. அதன் பிறகு முதல் இடத்தில் இந்தியா உள்ளது. பின்னர் கனடா மற்றும் இங்கிலாந்து நாடுகள் உள்ளன. ஆனால் மிக அதிகமான முறையில் ஆப்ரிக்க நாடுகளில் தான் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நான் இதற்கு முன்பு பல முறை கூறி இருக்கின்றேன். அத்ஃபால் பரிவில் வக்ஃபே ஜதீத் பிரிவில் கனடாவில் நன்கு ஒருங்கிணைந்த பணி நடைபெறுகின்றது. மற்ற நாடுகளிலுள்ள பெரிய ஜமாஅத்துகளும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இது பற்றி நான் இதனையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அத்ஃபால் பதிவேறு என்பது வக்ஃபே ஜதீதில் மட்டுமே உள்ளது. தஹ்ரீகே ஜதீதில் கிடையாது.

ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில் இந்தியாவின் முதல் பத்து மாநிலங்கள்: கேரளா, தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, கர்நாடகா, பெங்கால், ஒரிசா, பஞ்சாப், உத்தர பிரதேசம், தில்லி, மஹாராஷ்டிரா.

வசூல் அடிப்படையிலான ஜமாஅத்தின் பெயர்கள்: கருளாயி, கோழிக்கோடு, பத்தபிரியம், கன்னூர் டவுன், கொல்கத்தா, சூலூர், பேங்களூர், பயன்காடி, ரிஷி நகர்.

அல்லாஹ் தஆலா பொருள் தியாகம் செய்த அனைவரின் வாழ்நாளிலும் செல்வத்திலும் பரக்கத் செய்வானாக. அல்லாஹ் தஆலா முன்பை விட அதிகமாக பொருள் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவதுடன் எண்ணிக்கையை அதிகப்படுத்தக்கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக. இறுதியில் ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய முஹம்மது அஸ்லம் ஷா மங்களா சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய அஹ்மது ஷேர் ஜோயா சாஹிப் அவர்களுடைய நன்மைகளை எடுத்துக் கூறினார்கள். மேலும் மர்ஹூமீன்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 08.01.2016
Tamil Translation : Moulavi. Abdur Rahman Tahir Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516